27.08.2024

அ.வ.எண்.140-2019

வாசா.2 -ஜெயபிரகாஷ்

1 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பிறந்தது முதல் காங்கேயம்பாளையம் முகவரியில் தான் வசிக்கிறேன். என்னுடைய ஆதார் முகவரியும் இதுதான். எனது தாயாருடன் சேர்த்து தான் எனக்கு குடும்ப அட்டை உள்ளது. அதில் என் தகப்பனார் பெயரும் உள்ளது. குடும்ப அட்டை எண் தெரியாது. ஜெகந்நாதன் அவர்களது ஆதார் முகவரி எனக்கு தெரியாது. நான் பிறந்ததற்கு பின்னிட்டு என் பெரியம்மா ராஜேஸ்வரி வீட்டில் ஒண்டிப்புதூரில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. ஜெகந்நாதன் அவர்களது ஆதார் முகவரி சென்னி ஆண்டவர் கோவில் வீதி என்று உள்ளது என்றால் ஆமாம். நான் பிறந்த பின்னிட்டு எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததா என்றால் இல்லை. ஜெகந்நாதனுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் என்னிடம் இல்லை. ஜெகந்நாதனுடைய குடும்ப அட்டை 1 முதல் 5 பிரதிவாதிகள், மற்றும் ஜோதிமணி அவர்களது பெயரும் சேர்ந்து உள்ளது என்றால் சரியல்ல.

என்னுடைய ஆதார் முகவரி நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரி இல்லாததால் தான் நான் என்னுடைய ஆதார் அட்டையை நான் இங்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி தனியாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. ஜெகந்நாதன் இறக்கும்வரை 1ம் வாதி அவருடன் தான் வசித்து வந்தார். ஜெகந்நாதன் அவர்களுக்கு சொத்துககள் இருப்பதால் அதற்காக வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். ஜெகந்நாதனுக்கு ஜோதிமணி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றும், நான் மற்றும் என் தாயார் வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. நான் சொத்திற்காக பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணைக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. .

Sd/ஜெயபிரகாஷ்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

Sd/Renuga
District Munsif Sulur